**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

## ஆண்டவரோடு உள்ள உறவில் நிலைத்திருங்கள்.

(பிலிப்: 4:1)

இயேசு பாடுகள் பட்டு இறந்து உயிர்த்தெழுவது எவ்வளவு அவசியம் என்று கூறினாலும், இந்தப் போதனை திருத்தூதர்களின் புரிந்துகொள்ளும் தன்மைக்கு அப்பாற்பட்டு இருந்தது. (லூக்கா 9: 44-45)

உருமாற்றத்தின்போது, “இவரே என் மகன்” என்று தந்தையாகிய கடவுள் அறிவித்தபோது, அவருடைய தெய்வீகத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டது. இயேசு மெய்யான இறைவன், மெய்யான மனிதன் என்பது உருமாற்றத்தின் போது வெளிப்படுத்தப்பட்டது. நம்முடைய எண்ணங்களை சிலுவையின்மீது நிலைநிறுத்தினோமென்றால், இயேசுவின் உயிர்த்தெழுதலும், உயர்த்தப்படுதலும், சிலுவையின் வழியாக அன்றி வேறெதிலும் இல்லை. அவருடைய தெய்வீகம் சிலுவையுடன் இணைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். தொடக்ககால திருத்தூதர்களைப் போல துன்பமும் மரணமும் பாவத்தின் மீது கொண்ட வெற்றியாகவும் மற்றும் புதிய வாழ்வோடு இணைக்கப்பட்டுள்ளது என்ற எண்ணமும் இன்றைய கிறிஸ்துவர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவும், நியாயமற்றதாகவும் தோன்றலாம். இருப்பினும், **“உங்கள் சிலுவையை சுமந்து செல்லுங்கள்” என்ற வார்த்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் தங்களுடைய நம்பிக்கையின் ஒருபகுதியாக எதிர்பார்க்க வேண்டிய சவாலை பிரதிபலிக்கின்றது**.

ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே; நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே (பிலி:1:21) “தன் சகோதர சகோதரிகளுக்காக உயிரைக் கொடுப்பதே ஒரு உண்மையான கிறிஸ்தவ சீடரின் அளவுகோல். இந்தப் புரிதல் ஒரு உண்மையான கிறிஸ்தவனுக்கு இல்லையென்றால் எந்த அர்த்தமும் இல்லை. “ஆகவே, நாமும் நம் சகோதரர் சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.(1 யோ: 3:16) கிறிஸ்தவனாக வாழ நாம் துன்பங்களையும் தியாகத்தையும் அனுபவித்தாக வேண்டும். நமக்காக அல்ல; பிறருக்காகவும் இதை நாம் செய்தாக வேண்டும்.

நம்முடைய நிலைவாழ்வு இயேசுவின் பாடுகள் மற்றும் மரணத்தால் விலைகொடுத்து வாங்கப்பட்டுள்ளது. மேலும் அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பின் மீதான நம்பிக்கை, கிறிஸ்துவை நோக்கி கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல் பிறரிலும் நம் கவனத்தைச் செலுத்தவேண்டும். இம்மையிலும் மறுமையிலும் நாம் தேடும் அமைதி மற்றும் அன்பே நம் வாழ்க்கைப் பயணத்தின் உணர்வாக அமையும்.

**இன்றைய வாசகங்கள்:**

தொநூல்: 15: 5-12, 17-18;

திபா:27: 1, 7-9, 13-14;

பிலிப்: 3:17, 4:1;

லூக்கா 9: 28-36.

INTERNAL CIRCULATION ONLY
BUL 11/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

13 மார்ச் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் - தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்:

**உலக தண்ணீர் தினம் (மார்ச் 22)**

# உங்கள் நம்பிக்கையை ஆண்டவரில் வையுங்கள்



இன்றைய நற்செய்தியில் பழைய ஏற்பாட்டின் இறைவாக்கினர்களான மோசே, எலியாவுடன் இயேசு நடத்திய உரையாடலைப் பார்க்கின்றோம். இது அவர்கள் இறைவாக்குரைத்த பாஸ்கா மறைநிகழ்வை அதாவது கிறிஸ்துவின் பாடுகள், மரணம், மற்றும் உயிர்ப்பைப் பற்றியது. அவருடைய உருமாற்றத்திற்குப்பின் யெருசலேமில் இயேசு நிறைவேற்றவேண்டிய நிகழ்வுகளையும், பற்றி திருத்தூதர்களுக்குக் கற்பித்தார்.